# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜனவரி 14 2023 | Weekly E-paper • January 14, 2023




# கோடி கோடியாய்ப் பணம்... தெருக்கோடியில் ஒரு பிணம்

சுப.வீரபாண்டியன்

## தைத்திருநாளில் தலைவரை வாழ்த்துவோம்!

எழில்.இளங்கோவன்

## தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்!

தலையங்கம்

## பொது சிவில் சட்டம் “மனுதர்மம் 2.0”

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஜனவரி 14 2023 Weekly E-paper ● January 14, 2023


# கோடி கோடியாய்ப் பணம்... தெருக்கோடியில் ஒரு பிணம்

சுப.வீரபாண்டியன்

எல்லா துறைகளையும் போலத் திரை உலகிலும் போட்டியாளர்கள் இருப்பார்கள், இருக்கிறார்கள்!

தமிழ்த் திரை உலகில் அப்படிக் காலந்தோறும் இரு பெரும் நடிகர்கள் போட்டியாளர்களாக இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். தொடக்கத்தில், எம். கே. டி. பாகவதர், பி .யூ. சின்னப்பா! பிறகு, எம்ஜிஆர், சிவாஜி கணேசன்! அடுத்து, ரஜினிகாந்த், கமல்! இப்போது விஜய், அஜித்! இவர்களைத் தாண்டி இன்னும் பல புகழ்பெற்ற நடிகர் நடிகைகள் தமிழ் திரை உலகில் இருந்துள்ளனர் இப்போதும் இருக்கின்றனர்!

மற்ற துறைகளில் எல்லாம். அது தொழில் போட்டியாக, புகழ்போட்டியாக அவரவர்க்கு இடையில் மட்டுமே நிகழும். ஆனால் திரை உலகில் மட்டும், அவர்களைத் தாண்டி, அவர்களின் ரசிகர்களுக்கு இடையிலான போட்டியாகத் தொடர்ந்து மோதலாகவும் சில வேளைகளில் உருவெடுக்கும்!

நடிகர்களுக்கு இடையிலான அந்தப் போட்டியும். மோதலும் அண்மையில் வாரிசு, துணிவு என்னும் இரு படங்கள் வெளியிடப்பட்ட நாளில் உச்சத்திற்கு வந்திருப்பதோடு, நாகரிகத்தின் எல்லைக் கோடுகளையும் தாண்டி இருக்கிறது!

தடைகளை மீறுவது, பொதுமக்களுக்குத் தொல்லை தருவது, ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வது - எல்லாவற்றுக்கும் உச்சமாக ஓர் இளைஞர் உயிரையே பலி கொடுத்திருப்பது என்று அந்த நிகழ்வுகள் நடைபெற்று இருக்கின்றன.

அவ்வாறு மோதிக்கொண்ட நடிகர்கள் இருவரின் ரசிகர்களும், உழைப்பாளிகளாக அல்லது உழைக்கும் மக்களின் பிள்ளைகளாகத்தான் இருக்கக்கூடும். அன்றாடம் உழைத்தால்தான் வாழ்க்கை என்னும் நிலையில் இருக்கும் பல குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், இப்படி நிழலுக்காக மோதி, நிஜத்தை இழந்து கொண்டிருப்பது எவவளவு வேதனை!



புதுக்கோட்டைக்கு அருகில் ஒரு கிராமத்தில் நடந்திருக்கும் காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டித்து இளைஞர்கள் குமுறி அழவில்லை. சாதி வெறியால் நடைபெறும் ஆணவக் கொலைகளை அறுத்தெறியப் புறப்படவில்லை. இந்தித் திணிப்பை எதிர்த்து கிளர்ந்து எழவில்லை. சமூக அநீதிகளை, பெண் அடிமைத்தனத்தைத் பொறுக்க முடியாமல் போராடத் தெருவுக்கு வரவில்லை. வெறுமனே இரண்டு நடிகர்களின் திரைப்படங்களில் எது சிறந்த படம் என்பதை மக்கள் தீர்மானிப்பதற்கு முன், இவர்கள் தீர்மானிப்பதற்காக போட்டி போட்டுத் தெருவில் சண்டையில் இறங்கி இருக்கிறார்கள்!

இந்த நிலையை மாற்றியே தீர வேண்டும் என்பதில் அனைவரும் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. குறிப்பாக, அந்த இரண்டு நடிகர்களும் இது குறித்துச் சிந்திக்க வேண்டும். கவலைப்பட வேண்டும்!

கோடி கோடியாக ஊதியம் பெறும் நடிகர்கள், தெருக் கோடியில் இருக்கும் தங்கள் ரசிகர்களைக் காப்பாற்றியாக வேண்டும். அறியாமையில் இருந்து அவர்களை விடுவிக்க வேண்டும்! தங்கள் ரசிகர்களைச் சமாதானப்படுத்தி, அவர்களை நன்னெறிப்படுத்த வேண்டும்.

இனிமேலாவது ஒரே நாளில் இருவரின் படங்களும் வெளியாவதை அவர்களே தவிர்க்க வேண்டும்!

இரண்டு பேர் புகழ் பெறுவதற்காக, ஏராளமான இளைஞர்களின் வாழ்க்கை பலியாகக் கூடாது.

இளைஞர்களை இப்படிப்பட்ட கலவரங்களில் இழந்து விடும் நாடு, எதிர்காலத்தில் தன்னையே இழந்து விடக் கூடிய அபாயம் இருப்பதை அனைவரும் உணர வேண்டும்!

பொழுதுபோக்கு என்பது வாழ்வின் ஒரு பகுதி! வாழ்க்கை என்பது பொழுதுபோக்கின் ஒரு பகுதியாக ஆகிவிடக்கூடாது!

இளைஞர்களே! எதிர்காலத்தில் உங்களுக்கான எத்தனையோ களங்கள் . சின்னச் சின்னக் குளங்களில் விழுந்து மறைந்து விடாதீர்கள்!

●

# தைத்திருநாளில் தலைவரை வாழ்த்துவோம்!

எழில்.இளங்கோவன்

ரஷ்யப் புரட்சியாளர் ஜோசப் ஸ்டாலின் மறைவதற்கு நான்கு நாள்களுக்கு முன்னர் பிறந்தவர் மு.க.ஸ்டாலின்.



அவர் போல்ஸ்விக் கட்சியின் தலைவர், இவர் தி.மு.கழகத்தின் தலைவர். இருவரும் நாத்திகர்கள். இருவரும் கொள்கையிலும், செயல்பாட்டிலும் உறுதியானவர்கள்.

2021 மே, 7ஆம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் தலைவர் ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற போது இந்திய ஒன்றியமே, இன்று சீனாவில் இருப்பதைப் போல கொரோனாவால் சீரழிந்து கொண்டு இருந்தது.

உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் உள்ளிட்டப் பல மாநிலங்கள் பிணங்களை எரிக்க முடியாமல் தெருவோரங்களில் கிடத்தியிருந்த கொடுமையைப் பார்த்தோம்.

தமிழ்நாட்டில் மாண்புமிகு முதல்வரின் நிர்வாகத் திறமையாலும், விரைந்த - சோர்வில்லாச் செயல்பாட்டாலும் கொரோனாவைக் கட்டுக்குள் கொண்டு வந்து நிறுத்தினார்.

- **பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம்.**
- **மக்களைத் தேடி மருத்துவம்.**
- **தமிழ்நாட்டின் முதல் வேளாண் நிதிநிலை அறிக்கை.**
- **இல்லம் தேடிக் கல்வி.**
- **அரசுப் பள்ளி மாணவியருக்கு மாதம் 1,000 ருபாய்**
- **நான் முதல்வன்.**
- **பசுமைத் தமிழ்நாடு இயக்கம்.**
- **புதுமைப்பெண்.**
- **முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம்**

இன்னும் சொல்லப் போனால் நம் முதலமைச்சரின் மக்களுக்கான சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் 2019ஆம் ஆண்டில் நடத்திய ஆய்வில், இந்திய ஒன்றியத்தின் சக்தி வாய்ந்த தலைவர்களுள் தலைவர் ஸ்டாலினும் ஒருவர்.

‘இந்தியா டுடே’ இதழ் 2022, ஆகஸ்டில் நடத்திய கருத்துக் கணிப்பில், இந்திய ஒன்றிய முதல்வர்களுள் முதல் இடத்தைப் பிடித்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

2023ஆம் ஆண்டு முதல் சட்டமன்ற ஆளுநர் உரையின் போது, தமிழ்நாடு அரசு ஆளுநரின் முன் ஒப்புதலோடு தயாரித்துக் கொடுத்த உரையில் சமூக நீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, தமிழ்நாடு, தமிழ்நாடு அமைதிப் பூங்கா போன்ற சொற்களையும், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், தலைவர் கலைஞர் ஆகிய பெயர்களையும் வெட்டியும், அவருக்கு ஏற்றவாறு ‘இந்த’ போன்ற சொற்களை ஒட்டியும் பேசி சட்டமன்ற மரபை மீறினார்.

ஆளுநர் பேசும்போதோ, அதற்கு முன்போ, பின்போ யாரும் குறுக்கிட்டுப் பேசக்கூடாது என்பது விதி. அந்த 17ஆம் விதியில் திருத்தம் கொண்டு வந்து, ஆளுநரின் உரையைத் தவிர்த்து, அரசு தயாரித்த உரையை அப்படியே அவைக் குறிப்பில் பேரவைத் தலைவர் மூலம் ஏற்றிடச் செய்த துணிச்சலான செயல் இந்திய ஒன்றியத்தில் எந்த மாநிலத்திலும் இதுவரை நடைபெறவில்லை என்பது வரலாறாகப் பதிவாகியிருக்கிறது.

அமைதியான முகம், மென்மையான பார்வை, தெறிக்க விடும் சின்னச் சிரிப்பு, அமைதி, பொறுமை, கழகத் தோழர்களை அரவணைக்கும் பாங்கு, முதலமைச்சருக்கான திறமை, செயல்பாடுகள் எனத் தலைவரின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வாண்டு, தமிழர்களின் தைத்திரு நாளில் தலைவரை வாழ்த்துவோம், அவரின் கரத்தை வலுப்படுத்த உறுதியேற்போம்! ●



திராவிட நட்புக் கழகத்தின் தாம்பரம் மாநகரச் செயலாளராகத் தோழர் CCTV இம்ரான் நியமிக்கப்பட்டுள்ளர்.

-ஆ.சிங்கராயர்
மாநில ஒருங்கிணைப்பாளர்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்!

அனைவருக்கும் இனிய தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள், மகிழ்ச்சியுடன்.

தை முதல் நாள் தமிழர்களின் புத்தாண்டா, அல்லது சித்திரை முதல் நாள் தமிழர்களின் புத்தாண்டா?

தைப்புத்தாண்டு என்பது பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் தொடர்ச்சியாக வருகிறது. அதனால் கி.பி / தி.பி என்று சரியாக வரலாற்றைச் சொல்ல முடியும்.

சித்திரையைப் புத்தாண்டு என்று சொன்னால், அங்கே 60 ஆண்டுகள் மட்டுமே சுழற்சி முறையில் வந்து, வந்து செல்லும்.

இந்த முறையில் வரலாற்றைப் பேசக் கூட முடியாது. இது பார்ப்பனியத்தின் திசை திருப்பும் சூழ்ச்சி.

அவர்கள் வேண்டுமானால் கோடிக்கணக்கான ஆண்டுகள் என்றும், புராணம் என்றும் கதைகளைச் சொல்லிக் கொண்டு இருப்பார்கள்.

தமிழ்நாட்டின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது தெரியும், அங்கே திராவிடச் சித்தாந்தமும், திராவிட இயக்கத்தின் செயல்பாடுகளும் எந்த அளவுக்குத் தமிழர்களுக்கு அரணாக அவை இருந்தன என்று.

இன்று இந்தியைத் திணித்துத் தமிழை அழிக்கப் பார்க்கிறது பார்ப்பனக் கூட்டம்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் இவர்களுக்குப் பின்னர் இன்று தமிழ்நாட்டின் அரணாக இருந்து வருகிறார் தளபதி ஸ்டாலின் அவர்கள்.

பார்ப்பனர்களுக்குத் தமிழ், தமிழ்நாடு, திராவிடம் என்றால் பிடிக்காது.

இந்து ராஷ்ட்ரா என்ற மதவெறியை திராவிடம் ஏற்காது.

அதை நோக்கிச் செல்லும் பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவெறி, சமூக அநீதி அமைப்புகளை எதிர்க்கத் தமிழர்கள் ஒன்றுபட்டு வரவேண்டும்.

தலைவர் மு.க.ஸ்டாலின் கரத்தை வலுப்படுத்த வேண்டும்.

வாருங்கள் தமிழர்களே!

பொங்கல் திருநாள் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்வோம்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## கூடுவாஞ்சேரியில் கொடியேற்றம்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செங்கல்பட்டு மாவட்டம், கூடுவாஞ்சேரியில் 08-01-2022 அன்று பேரவைக் கல்வெட்டுத் திறப்பு மற்றும் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. கல்வெட்டைத் தோழர் ஆ.சிங்கராயர் திறந்து வைக்க, தோழர் சுப.வீரபாண்டியன் பேரவைக் கொடியை ஏற்றினார். உடன் தோழர்கள் எட்வின், இரா. உமா, மணி, முத்துக்குமார், இளங்கோ, இளமாறன் உள்ளிட்டோர் இருந்தனர்.

## சேலத்தில் நூல் திறனாய்வுக் கூட்டம்



08-01-2023ஆம் நாள், சேலம் மாவட்டம் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் மாவட்டச் செயலாளர் சுந்தரவதனம் தலைமையில் “நூல் கலந்துரையாடல் - 3” கூட்டம் தேக்கம்பட்டியில் தோழர் திராவிடஅரசு இல்லத்தில் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் பெண்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெருவாரியாகக் கலந்து கொண்டனர்.

## கோவையில் தோழர்கள் கைதாகி, விடுதலை



‘அரியவகை ஏழை’களுக்கான (பார்ப்பன) 10% இடஒதுக்கீடைக் கண்டித்துக் கோவையில் திராவிடர் இயக்க தமிழர் பேரவை, 10-01-2022 அன்று, மாநில அமைப்புச் செயலாளர் காசு. நாகராசன் தலைமையில் பிஎஸ்என்எல் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியது போது திராவிடர் தமிழர் கட்சி தலைவர் தோழர் வெண்மணி , புரட்சிகர இளைஞர் முன்னணி பொறுப்பாளர் தோழர் மலரவன், திராவிடர் நட்புக் கழகப் பொறுப்பாளர் தோழர் விஜயராணி உள்ளிட்ட தோழர்கள் அனைவரும் காவல்துறையால் கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

# பொது சிவில் சட்டம் "மனுதர்மம் 2.0"

மா.உதயகுமார்

இராமர் கோவில் கட்டுவது, இராமர் கட்டிய பாலம் என்று சேது கால்வாய்த் திட்டத்தைத் தடுத்து நிறுத்துவது, மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வருவது, பொது சிவில் சட்டம் இயற்றுவது, போன்ற மதம் சார்ந்த செயல்பாடுகளை மட்டுமே முன்வைத்து பாஜக அரசியல் நடத்தி வருகிறது. நாட்டை எப்போதுமே பதற்றத்தில் வைத்திருக்கும் இது போன்ற மதவாதச் செயல்திட்டங்களைக் கொண்டு மக்களின் கண்களை மறைத்து அடிப்படைப் பிரச்சனைகளிலிருந்து திசை திருப்புவது பாஜகவின் பெயரில் இயங்கும் பார்ப்பனியத்தின் அரசியல் ஆகும்.

பொது சிவில் சட்டம் இயற்றக்கோரி பாஜக மாநிலங்களவை உறுப்பினர் கிரோடி லால் மீனா தனிநபர் மசோதாவை அண்மையில் மாநிலங்களவையில் தாக்கல் செய்தார். பாஜகவின் குறிக்கோளே பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதுதான் என்கிற போது, எதற்காக அக்கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் தனிநபர் மசோதா தாக்கல் செய்ய வேண்டும்?

இந்திய விடுதலைக்குப் பின் அம்பேத்கர் தலைமையில் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் பொது சிவில் சட்டம் குறித்த விவாதம் தொடங்கியது. ஆனால் அனைவருக்குமான பொது சிவில் சட்டக் கோரிக்கை கைவிடப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து பொது சிவில் சட்டம் விவாதத்துக்குள்ளாகி வருகிறது. பலமுறை நீதிமன்றங்களும் வேறு மாதிரியான தீர்ப்புகளை வழங்கியிருக்கின்றன.

அரசமைப்புச் சட்ட நாளன்று, 'இந்தியா - ஜனநாயகத்தின் தாய்' என்னும் தலைப்பில், ஜாதிய அமைப்புகளைப் பாதுகாக்கும் கட்டப்பஞ்சாயத்துகளை உயர்த்திப் பிடிக்கும் வகையில், அவற்றை ஜனநாயக அமைப்புகளாகச் சித்தரித்து நிகழ்வுகளைப் பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கச் சொன்னார்கள். தற்போது எல்லா மதங்களுக்கும் பொதுவான சிவில் சட்டம் கொண்டு வருவதில் அதிக முனைப்புக் காட்டுகிறார்கள். ஜாதிக்கு ஒரு பஞ்சாயத்து, உள்ளூர் பழக்க வழக்கங்கள் இருக்க வேண்டும் என்று சொல்பவர்கள், எல்லா மதங்களுக்கும் பொதுவான ஒரு சிவில் சட்டம் இருக்க வேண்டும் என்று சொல்வது அவர்களின் கயமையைக் காட்டுகிறது.

பழக்கவழக்கம் பாரம்பரியம் என்கிற பெயரில், பார்ப்பனர் அல்லாதோரை சூத்திரர்களாக வைத்திருக்கும் ஜாதியைப் பாதுகாக்கும் சட்டங்களை ஒழிக்காமல், பொது சிவில் சட்டம் என்று கொண்டு வருவதன் நோக்கம் சனாதனத்தைப் பாதுகாக்கவும் சிறுபான்மையினரை நசுக்கவுமே ஆகும்.

திருமணம், மணமுறிவு, வாரிசு, சொத்துரிமை போன்றவற்றிற்கு எல்லா மதத்தினருக்கும் பொதுவான



சட்டம் இயற்றுத் துடிப்பது, இந்து மதத்தின் கூறுகளைப் பிற மதத்தினர் மீதும், மதமற்றவர்களின் மீதும் திணிப்பதற்காகும். மேலும், குடும்பம், கணவன்-மனைவி-குழந்தை என்கிற வரையறைகள் மாறிவரும் காலகட்டத்தில், *LGBTQ* உரிமைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் காலகட்டத்தில், அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம் கொண்டு வருவது என்பது, மதத்தைக் கடந்த பொதுவான சட்டம் உருவாக்குவதற்கு அல்ல. மாறாக மதச்சிறைக்குள் அனைவரையும் அடைப்பதற்கு.

பல்வேறு நாடுகளிலும் சிறுபான்மையினருக்கு, சட்டங்களில் சில விலக்குகளும் உரிமைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவை சிவில் சட்டங்கள்தாம். குற்றவியல் சட்டங்கள் அனைவருக்கும் பொதுவானதேயாகும்.

மதவாதத்தின் அடிப்படைக் கூறு என்பது, மக்களை மதச்சட்டத்தின் கட்டுக்குள் வைத்திருப்பது. அந்த மதச் சட்டங்கள் மனித நேயத்திற்கு எதிரானவையாகவும்; கல்விக்கு, அறிவியலுக்கு எதிரானவையாகவும்; ஜனநாயகத்திற்கு எதிரானவையாகவும் இருக்கக்கூடியவை. அவற்றை அவ்வளவு எளிதில் யாரும் மாற்றிவிடவோ, சீர்திருத்திவிடவோ முடியாது. பெண்களுக்கான சொத்துரிமையைப் பெற அண்ணல் அம்பேத்கர் கொண்டு வந்த சட்டத் திருத்தத்தை *(Hindu Code Bill)* எதிர்த்த மதவாதக் கும்பலை நாம் வரலாற்றில் பார்த்திருக்கிறோம். அந்த மதவாதக் கும்பல்தான் இன்று ஒன்றியத்தில் ஆட்சியில் அமர்ந்து கொண்டு, அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டத்தை இயற்றுவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. இவர்கள் என்ன மாதிரியான சிவில் சட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்பதற்கு அவர்கள் வரலாறே சான்றாகும். அச்சட்டம் ஒரு நவீன மனுதர்மமாகவே இயற்றப்படும்.

பார்ப்பனியத்தால் மூளையில் போடப்பட்ட விலங்குகளை உடைத்து மக்கள் வெளிவர நாம் போராடிக் கொண்டிருக்கின்ற வேளையில், மேலும் பல விலங்குகளைப் போட்டு மதச்சிறையிலடைக்கும் வண்ணம் உருவாக இருக்கும் பொது சிவில் சட்டம் அல்லது "மனுதர்மம் 2.0" வை, பல்வேறு தரப்பினரும் ஒன்றுபட்டு எதிர்த்திட முன்வர வேண்டும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian